www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| இந்துசமயம் Hinduism | Three Hours / Gr -12 (2023) | 42 | T | I,II |

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

### பகுதி - I

- **1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று எதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.**

01) 1. காரணம் 2. காமிகம் 3. நரசிங்கம் 4. அஜிதம் 5. சுப்பிரபேதம்

02) 1. கறைமிடற்றண்ணல் 2. புங்கன் ஊர்பவன் 3. ஆலமர் கடவுள் 4. முக்கட் செல்வன் 5. மயில் வாகனன்

03) 1. விசித்திரசித்தன் 2. மாமல்லன் 3. குணபரன் 4. ஷேதகாரி 5. மத்தவிலாசன்

04) 1. கண்ணகி வழிபாடு 2. முனியப்பர் வழிபாடு 3. ஐயனார் வழிபாடு 4. முருக வழிபாடு 5. மதுரை வீரன் வழிபாடு

05) 1. மெய்கண்டதேவர் 2. அருணந்தி சிவாச்சாரியார் 3. மறைஞான சம்பந்தர் 4. பரஞ்சோதி முனிவர் 5. உமாபதிச்சிவாச்சாரியார்

- **06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.**

06) 1. தேவாரம் - சம்பந்தர்
2. நம்பியாண்டர் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி
3. சேரமான் பெருமான் - திருக்கைலாய ஞான உலா
4. பட்டினத்தார் - பொண்வண்ண அந்தாதி
5. திருவாசகம் - மாணிக்கவாசகர்

07) 1. இயற்கை நெறிக்காலம் - வேதகாலம்
2. அறநெறிக்காலம் - சங்கமருவிய காலம்
3. பக்தி நெறிக்காலம் - பல்லவர் காலம்
4. பொற்காலம் - சோழர் காலம்
5. மட அதீன் எழுச்சிக்காலம் - விஜயநகர நாயக்கர் காலம்

08) 1. முயலன் நோயை நீக்கியமை - திருஞானசம்பந்தர்
2. யாழ் முறிப்பதிகம் - திருநாவுக்கரசர்
3. ஆற்றிலிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமை - சுந்தரமூர்த்தி நாயனார்
4. நரிகளைப் பரிகளாக்கி மாற்றியமை - மாணிக்கவாசகர்
5. தலையால் நடந்து கைலைக் சென்றவர் - காரைக்காலம்மையார்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09) 1. இராஜசிம்மன் - பெரிய கற்றளி
2. மாமல்லன் - சிற்பக்கலைக் களஞ்சியம்
3. பசுபதிச் செட்டியார் - வண்ணை வைத்தீஸ்வரன்
4. மகேந்திரவர்மன் - பெருவுடையார் கோயில்
5. கிருஷ்ண தேவாயர் - விருபாட்சகர் கோயில்

10) 1. திருமூலர் - திருமந்திரம்
2. நம்மாழ்வார் - திருவிருத்தம்
3. ஆதிசங்கரர் - விவேகசூடாமணி
4. மாணிக்கவாசகர் - திருவாசிரியம்
5. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு

- **11 தொடக்கம் 13 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

11)

| அ | | ஆ |
|---|---|---|
| 1. ஆர்ச்சிகம் | A | அதர்வணம் |
| 2. ரிதஷயகோபா | B | அக்கினி |
| 3. தேவ தூதன் | C | சாமவேதம் |
| 4. சுக்கிலயசுர் | D | வருணன் |
| 5. பேஷயாணி | E | சதருத்திரியம் |

1. CDABE 2. CDBEA 3. EDCBA 4. BCADE 5. EDCBA

12)

| அ | | ஆ |
|---|---|---|
| 1. ஜலசயனம் | A | ஓவியங்கள் |
| 2. வீணாகரன் | B | சிவானந்த நடனம் |
| 3. ஞானாமிர்தம் | C | சபாபதி நாவலர் |
| 4. ஆனந்தகுமாசாமி | D | மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் |
| 5. ராஜபுத்திர | E | இராஜசிம்மன் |

1. DCBAE 2. DECBA 3. BADEC 4. ECDAB 5. CDBEA

13)

| அ | | ஆ |
|---|---|---|
| 1. திருவருட்பயன் | A | குமரகுருபரர் |
| 2. பெரிய புராணம் | B | காரைக்காலம்மையார் |
| 3. சகலகலா வல்லிமாலை | C | உமாபதிசிவாச்சாரியார் |
| 4. திருப்புகழ் | D | சேக்கிழார் |
| 5. அற்புதத் திருவந்தாதி | E | அருணகிரி நாதர் |

1. BDCAE 2. EBDCA 3. BAECD 4. CDAEB 5. CADBE

- **மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 14 – 18 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>மெய்க்கீர்த்தி | B<br>ஆராய்ச்சி வெளியீடு | C<br>சுப்பிரமணியபுஜங்கம் | D<br>துதிபாடுதல் | E<br>ஞானசம்பந்தர் பத்திரி |
| F<br>தானம் வழங்குதல் | G<br>ஸ்ரீகுருஞான சம்பந்தர் | H<br>சேப்பேடு | I<br>கந்தர் கலி வெண்பா | J<br>பருவ இதல் |



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14) கௌமார வழிபாட்டுடன் தொடர்புடைய சேர்மானம்.
1. AC 2. CI 3. IJ 4. FI 5. CJ

15) வரலாற்று மூலாதாரத்துடன் தொடர்புடைய சேர்மானம்.
1. BI 2. CD 3. AJ 4. FG 5. AH

16) வேதகால கிரியைகளுடன் தொடர்புடைய சேர்மானம்.
1. DF 2. FH 3. IJ 4. CH 5. AB

17) தர்மபுர ஆதினத்துடன் தொடர்புடைய சேர்மானம்.
1. BH 2. DF 3. EG 4. AI 5. CJ

18) ஊடக வகையுள் அச்சு கலையுடன் தொடர்புடைய சேர்மானம்.
1. CJ 2. GH 3. BI 4. BJ 5. AC

- **19 தொடக்கம் 22 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தருக.**

19) பொலன்னறுவைக் காலத்தில் 'யோத எல' கால்வாயின் கரையில் காணப்பட்ட சிவன் கோயில்
1. 2ம் சிவாலயம் 2. 3ம் சிவாலயம் 3. 4ம் சிவாலயம் 4. 5ம் சிவாலயம் 5. 1ம் சிவாலயம்

20) "பட்டர் பிரான்" என அழைக்கப்படுபவர்
1. பெரியாழ்வார் 2. இராமானுஜர் 3. அபிராமிபட்டர்
4. பட்டினத்தார் 5. வசிட்டர்

21) விநாயகரின் திருவுருவில் எழுத்தாணி பிடித்த கரம் உணர்த்தும் தத்துவம்
1. படைத்தல் 2.காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல் 5. அருளல்

22) 'ஐந்தாம் வேதம்' எனப் போற்றப்படுவது
1. தர்மசாத்திரம் 2. வேதாங்கம் 3. மகாபாரதம்
4. வைணவ ஆகமம் 5. கிருஹ்ய சூத்திரங்கள்

- **23 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.**

23) கடையிற்சுவாமிகள்.
1. ஸ்ரீ நரசிங்க பாரதியாரின் உத்தம சீடராகக் கருதப்பட்டவர்.
2. பெங்களூர் நீதிமன்றில் நீதிபதியாகக் கடமையாற்றியவர்.
3. 19ம் நூற்றாண்டில் இந்தியாவில் பெங்களூரில் வாழ்ந்தவர்.
4. யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியை தனது வாழ்விடமாகக் கொண்டவர்
5. இரும்பைப் பொன்னாக்கி கொடுத்தவர்.

24) கோயிற் கிரியைகள்
1. ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை.
2. ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும்.
3. திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டவை.
4. அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுவது
5. கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம் பிராயச்சித்தம் என நால் வகைப்படும்.

25) ஆண்டாள்
1. துளசிச் செடியின் கீழ் கண்டெடுக்கப்பட்டவர்.
2. பெரியாழ்வாரின் அரவணைப்பில் வளர்ந்தவர்.
3. விஷ்ணுவைக் காதலனாகக் கொண்டு நாச்சியார் திருமொழியைப் பாடியவர்.
4. தென்னாட்டுப் பக்தி நெறியில் சிறப்பு பெற்றவர்.
5. பெண் பக்தி நெறியாளர்களுள் ஒருவர்.

(25x4=100 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01) இந்து சமய வரலாற்றில் வேதங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இதற்கமைய மேல்வரும் தலைப்புக்களை விளக்குக.
அ) வழிபாட்டு முறைகள்
ஆ) தத்துவ சிந்தனைகள்
இ) சமுதாய சிந்தனைகள்
ஈ) இலக்கிய மரபு

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

02) இந்து சமுதாயத்தில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
அ) இலக்கிய மரபு ஆ) சமுதாய வழமைகள் இ) சமய நெறிகள் ஈ) தர்ம சிந்தனைகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

03) விஜய நகர நாயக்கர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ) விஜய நகர நாயக்கர் காலத்தில் சைவ இலக்கியங்கள்
ஆ) விஜய நகர நாயக்கர் காலத்தில் கலை மரபு
இ) மடங்களின் பணிகள்
ஈ) திருவாவடுதுறை ஆதினத்தின் பணிகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

04) “இலங்கையின் இந்து சமய வரலாற்றில் பொலன்னறுவைக்காலம் சிறப்பிடம் பெற்றுள்ளது” இக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) வரலாற்று மூலாதாரங்கள் ஆ) சைவ சமய வளர்ச்சி
இ) வெண் கலப்படிமங்கள் ஈ) கோயிலும் சிற்ப வடிவங்களும

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

05) அறுவகைச் சமய நெறிகளில் கௌமாரத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) தோற்றமும் வளர்ச்சியும் ஆ) பிரதிமாலட்சணம்
இ) மூர்த்தி பேதங்கள் ஈ) வழிபாட்டு முறைகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

06) தென்னக வரலாற்று காலங்களில் பல்லவர் கால சிற்பக்கலையின் வளர்ச்சியினைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

07) வைணவ தத்துவ வளர்ச்சியில் நம்மாழ்வாரின் பங்களிப்பினை விளக்குக. (20 புள்ளிகள்)

08) சைவ சமய வளர்ச்சியில் பங்களித்த பெரியார்களில் இந்து போர்ட். சு. இராசரத்தினம் அவர்களின் பங்களிப்பினை விளக்குக.

(20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!